ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2417/26 - 2025 ජනවාරි මස 01 වැනි බදාදා - 2025.01.01

*2417/26 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**ஏறாவூர் நகரசபை அதிகார பிரதேசத்திற்கான அபிவிருத்தித் திட்டத்தினை அங்கீகரித்தல்**

நகர அபிவிருத்தி, நிர்மாணத்துறை மற்றும் வீடமைப்பு அமைச்சர், அநுர கருணாதிலக்க ஆகிய எனக்கு 1982 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை (திருத்தப்பட்ட) சட்டத்தின் 8(F) ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு அமைய, 2024ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 15 ஆம் திகதி நகர அபிவிருத்தி அதிகாரசபையின் முகாமைத்துவ சபையினது பரிந்துரைகளை பரிசீலித்த பின்னர், ஏறாவூர் நகரசபை அதிகாரப் பிரதேசத்திற்கான அபிவிருத்தித் திட்டத்தின் அனுமதியினை இத்தால் அங்கீகரிக்கின்றேன்.

**அநுர கருணாதிலக்க** (பா. உ.),
நகர அபிவிருத்தி, நிர்மாணத்துறை மற்றும் வீடமைப்பு அமைச்சர்.

நகர அபிவிருத்தி, நிரமாணத்துறை மற்றும் வீடமைப்பு அமைச்சு,
12 ஆவது மாடி,
கட்டம் II,
“செத்சிறிபாய”,
பத்தரமுல்லை,
2024 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 26 ஆந் திகதி

EOG 01 - 0004/1



*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## ஏறாவூர் நகர சபை அதிகார பிரதேசத்திற்கான அபிவிருத்தித் திட்டத்தினை அங்கீகரித்தல்

*1982 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க கொண்ட நகர அபிவிருத்த அதிகாரசபை (திருத்தப்பட்ட) சட்டத்தின் திருத்தப்பட்ட 1978 ஆம் ஆண்டு 41 ஆம் இலக்கம் கொண்ட நகர அபிவிருத்தி அதிகாரசபை சட்டதின் திருத்தப்பட்ட 8 'A' ஆம் பிரிவிற்கு அமைய ஒழுங்குச் செய்யப்பட்ட ஏறாவூர் நகர சபை அதிகார பிரதேசத்தின் அபிவிருத்தித் திட்டத்திற்கான 2024 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 26 ஆம் திகதி, நகர அபிவிருத்தி, நிரமாணத்துறை மற்றும் வீடமைப்பு அமைச்சர் அநுர கருணாதிலக்க ஆகிய நான், குறித்த 1982 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை (திருத்தப்பட்ட) சட்டத்தின் பிரிவு 8F, இன் கீழ் எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரத்திற்கு அமைய, அனுமதி வழங்கினேன் என்பதை, குறிப்பிட்ட சட்டத்தின் 8 (G) ஆம் பிரிவின் பிரகாரம், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மக்களுக்கு இத்தால் அறிவிக்கின்றேன்*

**அநுர கருணாதிலக்க** (பா. உ.),
*நகர அபிவிருத்தி, நிர்மாணத்துறை மற்றும் வீடமைப்பு அமைச்சர்.*

*நகர அபிவிருத்தி, நிரமாணத்துறை மற்றும் வீடமைப்பு அமைச்சு,*
*12 ஆவது மாடி,*
*கட்டம் II,*
*"செத்சிறிபாய",*
*பத்தரமுல்லை,*
*2024 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 30 திகதி*

EOG 01 - 0004/2

---

## ஏறாவூர் நகர சபை அதிகார பிரதேசத்திற்கான அபிவிருத்தித் திட்டத்தினை அங்கீகரித்தல்

*1982 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க சட்டத்தின் திருத்தப்பட்ட 1978 ஆம் ஆண்டு 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின் 8(A) ஆம் பிரிவின் அதிகாரங்களுக்கு இணங்க ஏறாவூர் நகர சபை அதிகார பிரதேசத்திற்கான அபிவிருத்தித் திட்டத்திற்கு நகர அபிவிருத்தி, நிர்மாணத் துறை மற்றும் வீடமைப்பு அமைச்சர் கௌரவ அநுர கருணாதிலக்க அவர்களினால், குறித்த சட்டத்தின் 8(F) ஆம் பிரிவிலிருந்து அவருக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு இணங்க 2024 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 26 ஆந் திகதி அனுமதிக்கப்பட்டது என பொதுமக்களுக்கு இத்தால் அறிவிக்கின்றேன்.*

**பொறி. எல். பி. குமுது லால்,**
*தலைவர்,*
*நகர அபிவிருத்தி அதிகார சபை.*

*2024 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 30 ஆம் திகதி*

EOG 01 - 0004/3

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.